| | | |
|---|---|---|
| O.S No. | : | 171/2018 |
| DATE | : | 03.03.2026 |
| பெயர் | : | குமாரசாமி |
| தந்தை பெயர் | : | வனசுந்தரம் |

**வாதி தரப்பு பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7. புழக்கடை பகுதி காலி மனையாகத் தான் உள்ளது. சாட்சி தானாகவே முன் வந்து செடிகள் வைத்து அனுபவித்து வருவதாக தெரிவித்தார். மேற்படி செடிகள் எனது வீட்டின் பக்கத்தில் உள்ள புழக்கடையில் தான் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு நான் புழக்கடையில் கட்டிடம் கட்ட முயச்சித்த போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதிக்கு புழக்கடையில் 10க்கு 10 இடத்தில் உரிமையுள்ளது, அது அவரது பத்திரத்தில் கண்டுள்ளது , தற்போது அதை சேர்ந்து தான் அனுபவிக்கப்படுகிறது என்றால் சரியல்ல.

8. பி,வா.சா.ஆ 7 ஆவணத்தில் முன் பகுதி பத்தி மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. புழக்கடை பகுதி எந்த குறிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் புழக்கடை பகுதி எனக்கு சொந்தமானது என்று நான் கோருவது தவறு என்றால் சரியல்ல. புழக்கடை பகுதியில் கட்டிடம் கட்ட முயற்சி செய்த போது தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான், வீட்டை புனரமைத்து கட்டிடம் கட்டி வந்தோம். வாதிக்கு சொந்தமான இடத்தையும் சேர்த்து அதில் கட்டிடம் கட்ட உரிமை கிடையாது என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது, மறுவிசாரணை இல்லை..**